செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 21.06.2016

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; மே 2016

### தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

### தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர.சத்தரசிங்ஹ அவர்கள், 2016 மேமாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்திற்கு வருடம் பணவீக்கம் 5.3 % ஆக இருந்ததெனத் தெரிவித்தார்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மிக அண்மைய நுகர்வோர் விலைச் சுட்டெண் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாகும். 2015 ஒக்டோபரில் இருந்து தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்(அடிப்படை 2013=100) இனை மாதாந்தம் 21 நாட்கள் இடைவெளியில் வெளியிடுகிறது.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 மேமாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 மேமாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 113.7 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (ஏப்ரல்) சுட்டெண்ணான 111.6 உடன் ஒப்பிடுகையில் 2.1 சுட்டெண் புள்ளி மற்றும் 1.9 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.91% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.97% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

ஏப்ரல் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 மேமாதத்திற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.91% அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த மாதம் (ஏப்ரல்) உடன் ஒப்பிடும்போது மரக்கறி, அரிசி, தேசிக்காய், உருளைக்கிழங்கு, பருப்பு, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், கோழி இறைச்சி, சீனி, வெள்ளைப் பூண்டு மற்றும் கருவாடு என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே உணவுப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்புக்குக் காரணமாகும். எனினும் முட்டை, பப்பாசிப்பழம், வாழைப்பழம், மாம்பழம் மற்றும் தேங்காய் என்பவற்றின் விலைகளில் கடந்த மாதம் (ஏப்ரல்) உடன் ஒப்பிடும்போது விலை வீழ்ச்சி காணப்படுகிறது.

ஏப்ரல் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 மேமாதத்திற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.97% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'சுகாதாரம்', 'தொடர்பாடல்', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' 'வீட்டு வசதி, நீர், மின்சாரம், எரி வாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள்', 'உடையும் காலணியும்', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தனப் பராமரிப்பு' மற்றும் 'கேளிக்கை மற்றும் கலாச்சாரம்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பினாலாகும். மேலும் கடந்த மாதம் (ஏப்ரல்) உடன் ஒப்பிடும்போது 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்', ஆகிய பிரிவுகளின் பெறுமதியில் மிகச் சிறிதளவு சதவீத அதிகரிப்புக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் கடந்த மாதம் (ஏப்ரல்) உடன் ஒப்பிடும்போது உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', செலவுப் பெறுமதி குறைவடைந்துள்ளதைக் காட்கின்றது. எனினும் 'போக்குவரத்து', 'கல்வி' ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தொ.இல.; 011-2147001/ 011-2147020